ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1802/22 - 2013 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2013.03.22
*1802/22 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**பன்வில பிரதேச சபை**

வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணைவிதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது வகுதியின் (VII) உப பிரிவின்கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய பன்வில பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டமூலத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின்கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2007, ஒகத்து மாதம் 17 ஆந் திகதிய 1510/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பன்வில பிரதேச சபையின் வாடகை வாகனங்கள் நிறுத்திவைப்பது தொடர்பான துணை விதிகளின் மூன்றாவது துணைவிதியை நீக்கி, அதற்குப் பதிலாகப் பின்வரும் துணைவிதி மூன்றாவது துணைவிதியாகச் சேர்ப்பதெனவும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய துணைவிதிகள் மாற்றமின்றி இருக்குமெனவும் மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் பன்வில பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி அமைச்சரும்.*

*முதல் அமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண சபை,*
*கண்டி,*
*2013, சனவரி 08.*

**வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணைவிதிகள்**

பன்வில பிரதேச சபை

*3. பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, தலைவரால் அறிவித்தல் விடுக்கப்படும் இங்கு முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இடங்கள் தவிர்ந்த ஏனைய எந்த இடத்திலும் மோட்டார் வாகனத்தை வாடகை ஓட்டத்துக்கென நிறுத்தி வைத்தல் கூடாது. சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் குறித்த இடங்களில் மாற்றங்களைச் செய்ய முடியும்.*

*4- 250*